ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව] முழுப் பதிப்புரிமையுடையது] All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / **இலங்கை பரீட்சைத் திணைக்களம்** / Department of Examinations, Sri Lanka

**இலங்கை சுங்கத் திணைக்களத்தில் சுங்கப் பரிசோதகர் தரம் I இலுள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படவுள்ள இரண்டாவது தடைதாண்டல் பரீட்சை (புதிய பாடத்திட்டம்) - 2020 I (2023)**

Second Efficiency Bar Examination for Inspectors of Customs Grade I in Sri Lanka Customs (New Syllabus) - 2020 I (2023)

**(01) இலங்கை சுங்கம் மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டம்**

Sri Lanka Customs and Customs Ordinance

*இரண்டு மணித்தியாலங்கள்*
*Two hours*

- **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

**1.** (i) இலங்கைச் சுங்கம் எந்த அமைச்சின் கீழ் அமையப் பெற்றுள்ளது? (02 புள்ளிகள்)

(ii) தீவு முழுவதுக்குமான சுங்க செயற்பாடுகள் தொடர்பாக அதிகாரத்துவம் மிக்கவர் யார்? (02 புள்ளிகள்)

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்ட அதிகாரத்துவம் தொடர்பான அதிகாரமளிப்பு சுங்க கட்டளைச் சட்டத்தின் எந்த பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது? (02 புள்ளிகள்)

(iv) இலங்கைச் சுங்கத்துடன் மிகவும் இணைந்து செயல்படும் அரச நிறுவனங்கள் **ஐந்தைக்** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(v) இலங்கைச் சுங்கத்துடன் மிகவும் இணைந்து செயல்படும் அரச சார்புள்ள நிறுவனங்கள் **ஐந்தினைப்** பெயரிடுக. (05 புள்ளிகள்)

(vi) சுங்க உப பிரிதிநிதித்துவ நிறுவனமொன்றை நடாத்துவதற்குரிய அதிகாரத்தினை வழங்குவது சுங்க கட்டளைச் சட்டத்தின் எந்த பிரிவாகும்? (02 புள்ளிகள்)

(vii) சுங்க உப பிரதிநிதித்துவ நிறுவனமொன்றை நடாத்துவதற்கான அதிகாரத்தினை வழங்குவதற்கான பின்னிணைப்பு யாது? (02 புள்ளிகள்)

**2.** (i) இலங்கைச் சுங்கத்தின் பிரதான குறிக்கோள்கள் **நான்கினையும்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) இலங்கைச் சுங்கத்திடம் பணிக்கப்பட்டிருக்கும் கடமைகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கைச் சுங்கத்தின் தொலைநோக்கு யாது? (04 புள்ளிகள்)

(iv) இலங்கைச் சுங்கத்தின் பணிக்கூற்று என்ன என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் பிரதான கொத்தணி பிரிவுகளை பெயரிடுக. (04 புள்ளிகள்)

**3.** (i) சுங்க செயல்பாடுகள் தொடர்பாக அதுவரை நடைமுறையிலிருந்த சகல கட்டளை சட்டங்களையும் ஒருங்கிணைத்து ஆங்கிலேயரால் முதலாவதாக அறிமுகப்படுத்தப்பட்ட சுங்க கட்டளைச் சட்டம் எவ்வாறு பெயரிடப்பட்டது? (02 புள்ளிகள்)

(ii) 1988 ஆம் ஆண்டு சுங்க கட்டளைச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்திற்கு முன்னர் சுங்கப் பணிப்பாளர் நாயகம் என்ன பெயரினால் அழைக்கப்பட்டார்? (02 புள்ளிகள்)

(iii) அண்மைக் காலத்தில் செய்யப்பட்ட திருத்தங்களின் பின்னர் சுங்க கட்டளைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்ட அத்தியாயங்கள் **இரண்டும்** யாவை? (02 புள்ளிகள்)

(iv) சுங்க கட்டளைச் சட்டத்தின் 167 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கு அமைவாக 'சுங்க பணிப்பாளர் நாயகம்' எனும் பதத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள பதவிகள் யாவை? (05 புள்ளிகள்)

(v) சுங்க கட்டளைச் சட்டத்தின் 167 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்கு அமைவாக 'தீர்வை கட்டும் வரை சரக்கை தடுத்து வைத்திருக்கும் பிணை பண்டகசாலை' எனும் பதத்தினால் குறிப்பிடப்படுவது யாது? (05 புள்ளிகள்)

(vi) சுங்க கட்டளைச் சட்டம் 1 இலிருந்து 15 வரையுள்ள பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் அதிக எண்ணிக்கையான பிரிவுகளை உள்ளடக்கியதாக பிரிக்கப்பட்டிருக்கும் பகுதி எந்த விடயத்தை பற்றியதாகும்? (02 புள்ளிகள்)

(vii) சுங்க கட்டளைச் சட்டத்தின் பின்னிணைப்பு 'அ' பற்றி குறிப்பிடும் பிரிவு யாது? (02 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

**4.** (i) சுங்க கட்டளைச் சட்டத்தின் 47 ஆவது பிரிவின்படி இறக்குமதி தீர்வை பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டிய முக்கியமான விடயங்கள் **ஐந்தினைக்** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) வெளிநாட்டில் இருந்து வரும் பயணியை பரிசோதனை செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பது சுங்க கட்டளைச் சட்டத்தின் எப்பிரிவின் அடிப்படையிலாகும்? (02 புள்ளிகள்)

(iii) வெளிநாட்டிற்கு செல்வதற்கு புறப்படும் பயணியொருவரை பரிசோதனை செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருப்பது சுங்க கட்டளைச் சட்டத்தின் எப்பிரிவின் அடிப்படையிலாகும்? (02 புள்ளிகள்)

(iv) சுங்க கட்டளைச் சட்டத்தின் 107 (அ) 3 இன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் சுங்க கட்டளைச் சட்ட விடயம் யாது? (02 புள்ளிகள்)

(v) இறக்குமதி தீர்வை பத்திரம் பற்றி கூறும் சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரிவு யாது? (02 புள்ளிகள்)

(vi) சுங்க கட்டளைச் சட்டத்தின் 37 ஆவது பிரிவு ஒதுக்கப்பட்டுள்ளது எவ்வகையான பொருள் சம்பந்தமானதாகும்? (02 புள்ளிகள்)

(vii) பொருள் தொடர்பான முழுமையான தகவலை பெற முடியாமை காரணமாக அது தொடர்பான விபரத்தை குறிப்பிட முடியாத இறக்குமதியாளர் ஒருவர் சுங்க கட்டளைச் சட்டத்தின் 49 வது பிரிவு விதிகளுக்கு அமைய முன் வைக்க வேண்டிய ஆவணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

**5.** (i) சட்டவிரோதமான முறையில் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட சரக்கு தொகையொன்று வாகனத்தில் கொண்டு செல்லப்படுவதாக கிடைத்த தகவலுக்கு அமைவாக தேடுதலுக்கு செல்வதற்கு முன்பாக சுங்க பரிசோதகரொருவர் ஆயத்தமாகும் விதத்தை தெளிவுபடுத்துக. (05 புள்ளிகள்)

(ii) 'சோதனை அனுமதிப் பத்திரம்' என்பதனை விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) தேடுதலுக்காக செல்லவிருக்கும் சுங்க பரிசோதகர் ஒருவருக்குள்ள அதிகாரங்கள் **ஐந்தினைக்** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iv) சுங்க கட்டளைச் சட்டத்தின் விதிகளை மீறும் சந்தர்ப்பத்தில் சரக்கு அல்லது ஆள்களை கைது செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள 'சமாதான அலுவலர்' என்பவர் யார்? (05 புள்ளிகள்)

**6.** (i) 'தேசிய நீர் எல்லை' இன் கடல் மைல்களின் எண்ணிக்கை யாது? (02 புள்ளிகள்)

(ii) சுங்க கட்டளைச் சட்டத்தின் 143(I) பி பிரிவில் உள்ள விசேடத்துவமிக்க அதிகாரம் யாது? (02 புள்ளிகள்)

(iii) சுங்க கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின்படி கையூட்டல் பெறும் அலுவலருக்கு வழங்கப்படும் தண்டனை யாது? (02 புள்ளிகள்)

(iv) கைவிடப்பட்ட சரக்கென்றினை முடிவுறுத்தல் செய்தல் தொடர்பான சுங்க கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் **இரண்டினையும்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(v) சுங்க பரிசோதனையின் பின் பறிமுதல் செய்யப்பட்ட சரக்கொன்றினை முடிவுறுத்துவதற்கு முன்னர் வைத்திருக்கப்பட வேண்டிய நாட்கள் எத்தனை? (02 புள்ளிகள்)

(vi) பறிமுதல் செய்யப்பட்ட இலகுவில் பழுதடையக்கூடிய சரக்கொன்றினை முடிவுறுத்தல் செய்வதற்கு சுங்க கட்டளைச் சட்டத்தின் 162 ஆவது பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கால வரையறை யாது? (02 புள்ளிகள்)

(vii) சுங்க கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் படி அரச உடைமையாக்கப்பட்ட பொருளை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் பணம் மற்றும் தண்டப்பணம் என்பவற்றின் கூட்டுத்தொகையில் திறைசேரி பிரதி செயலாளர் அவர்களுக்கு ஒதுக்கப்படும் சதவீதம் யாது? (02 புள்ளிகள்)

(viii) மேலே (vii) இல் குறிப்பிடப்பட்ட அளவில் பொது நிதிக்கு ஒதுக்கப்படும் சதவீதம் யாது? (02 புள்ளிகள்)

(ix) மேலே (viii) இல் கூறப்பட்டுள்ள அளவின் எஞ்சிய பகுதி நிதி எப்பெயரால் அழைக்கப்படுகின்றது? (02 புள்ளிகள்)

(x) பரிசு நிதியினை ஒதுக்கீடு செய்வது தொடர்பாகக் குறிப்பிடப்படும் திணைக்கள கட்டளை யாது? (02 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க

**7.** (i) பழுதடைந்த உணவினை கொண்டுள்ள சரக்கு வண்டியொன்றை அரச உடமையாக பறிமுதல் செய்வதற்கு பின்பற்ற வேண்டிய சட்டம் யாது? (02 புள்ளிகள்)

(ii) தர நிர்ணய அடிப்படையில் சரக்கு இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பங்களில் தரத்தினைப் பரிசோதிப்பதற்கு முற்படுத்தும் நிறுவனம் யாது? (02 புள்ளிகள்)

(iii) வாள், சிறுவாள் போன்றவற்றை நாட்டிற்குள் கொண்டு வருதல் அல்லது கொண்டு செல்லல் என்பவை சுங்க கட்டளைச் சட்டத்தின் எப்பிரிவின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது? (02 புள்ளிகள்)

(iv) புராதன பொருட்களை ஏற்றுமதி செய்வது எச்சட்டத்தின் மூலம் தடை செய்யப்பட்டுள்ளது? (02 புள்ளிகள்)

(v) மசகு மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதி சம்பந்தமாக அனுமதிப் பத்திரம் வழங்கும் நிறுவனம் யாது? (02 புள்ளிகள்)

(vi) வெளிநாட்டு நாணயத்தாள் இறக்குமதி கட்டுப்பாடு மற்றும் ஏற்றுமதியை கட்டுப்படுத்தல் தொடர்பாக கூறும் சட்டம் யாது? (02 புள்ளிகள்)

(vii) சரக்கு பொருட்கள் இறக்குமதி கட்டுப்பாடு மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடு தொடர்பாக கூறும் சட்டம் யாது? (02 புள்ளிகள்)

(viii) சுங்க கட்டளைச் சட்டத்தின் "ஆ" பின்னிணைப்பின் பிரகாரம் இந்நாட்டிற்கு இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ள தவறான ஆவணமொன்றை அரசுடைமையாக பறிமுதல் செய்வதற்கு பயன்படுத்தப்படும் **இரண்டு** சட்டங்கள் / கட்டளைச் சட்டங்களைக் கூறுக. (02 புள்ளிகள்)

(ix) கதிர்வீச்சு உள்ளதாக சந்தேகிக்கப்படும் சரக்கினை இறக்குமதி செய்யும்போது அதனை முற்படுத்த வேண்டிய நிறுவனம் யாது? (02 புள்ளிகள்)

(x) தடைசெய்யப்பட்ட சரக்கு பொருட்களை இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்தால் வழங்கப்படும் தண்டனை யாது? (02 புள்ளிகள்)

**8.** (i) சுங்க கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனை முறைகள் **ஐந்தினைக்** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) சுங்க கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவில் சொல்லப்படுவது யாது? (05 புள்ளிகள்)

(iii) தீர்வையின்றிய சரக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) சுங்க கட்டளைச் சட்டத்தின் 29 ஆவது பிரிவுக்கு அமைவாக கப்பல் தலைவரினால் முன்வைக்கப்படும் கப்பல் சரக்கு விபரத்தில் குறிப்பிடப்படும் விடயங்கள் யாவை? (04 புள்ளிகள்)

(v) நாட்டின் எந்தவொரு கப்பல் துறையையும் வந்தடையும் எந்தவொரு கப்பலுக்குள்ளும் பிரவேசிப்பதற்கு சுங்க அலுவலருக்கு அதிகாரத்தை அளிப்பது சுங்க கட்டளைச் சட்டத்தின் எப்பிரிவிலாகும்? (02 புள்ளிகள்)

❊ ❊ ❊

සියලු ම හිමිකම් ඇවිරිණි] முழுப் பதிப்புரிமையுடையது] All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / **இலங்கை பரீட்சைத் திணைக்களம்** / Department of Examinations, Sri Lanka

**இலங்கை சுங்கத் திணைக்களத்தில் சுங்கப் பரிசோதகர் தரம் I இலுள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படவுள்ள இரண்டாவது தடைதாண்டல் பரீட்சை (புதிய பாடத்திட்டம்) - 2020 I (2023)**

Second Efficiency Bar Examination for Inspectors of Customs Grade I in Sri Lanka Customs (New Syllabus) - 2020 I (2023)

**(02) சுங்க சட்டம் மற்றும் சுங்க நடைமுறைகள்**

Customs Law and Procedures

***இரண்டு மணித்தியாலங்கள்***
*Two hours*

- **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

**1.** (i) இலங்கை சுங்கத்தின் தற்போதைய சட்டகத்திற்கமைய நியமிக்கப்பட்டிருக்கும் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் பதவிகளைப் பெயரிட்டு, அப்பதவிகளினால் ஆற்றப்படும் கடமைகளைச் சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) சுங்கப் பணிப்பாளர் (பயணிகள் சேவை) பதவியில் உள்ளடக்கப்பட்டும் பணியிடங்களைக் குறிப்பிட்டு, அப்பணியிடங்களில் ஆற்றப்படும் செயற்பாடுகளைச் சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)

**2.** கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருகை தரும் பயணிகளின் வருகை தரும் வாயிலில் சிவப்பு வழி வெளியேறுகை (Red Channel) வாயிலில் சேவையில் ஈடுபடுத்தப்படும் சுங்கப் பரிசோதகரிற்கு உரித்தான கடமைகளை தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

**3.** சிங்கப்பூரிலிருந்து இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட சரக்குக் கப்பல் உதிரிப் பாகங்கள் அடங்கிய பெட்டியொன்று கட்டுநாயக்க விமான நிலையத்தின் பயணி சேவைகள் கட்டுநாயக்க பணிப்பகத்தின் பண்டக சாலையில் வைக்கப்பட்டுள்ளது. அப்பெட்டியினை திருகோணமலை துறைமுகத்தில் உள்ள கப்பலுக்கு கையளிக்கும் முகமாக சுங்க பிரிவினரின் கண்காணிப்பின் கீழ் கொண்டு செல்வதற்கு கடைப்பிடிக்கப்பட வேண்டிய செயற்பாடுகளை விபரமாக தருக. (20 புள்ளிகள்)

**4.** (i) சுங்க கட்டளைச் சட்டத்தின் பின்னிணைப்பு 'ஆ' (Schedule 'B') முக்கியத்துவம் பற்றி விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) சுங்க கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு மற்றும் 43 ஆம் பிரிவு, சுங்க கட்டளைச் சட்டத்தின் பின்னிணைப்பு 'ஆ' தொடர்புபடும் விதத்தை விளக்குக. (10 புள்ளிகள்)

**5.** இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் அடங்கிய லொறியொன்று கொழும்பு துறைமுக வெளியேறல் வாயிலுக்கு வரும்போது சுங்கப் பரிசோதகரால் கடைபிடிக்கப்படும் செயற்பாடுகளை விளக்குக. (20 புள்ளிகள்)

**6.** பயணிகளின் உடனல்லாது கொண்டு வரப்படும் பயண பொதிகள் கையாளப்படும் சரக்குகள் வைக்கப்படும் பண்டகசாலை (UPB Warehouse) இல் இணைப்புச் செய்யப்பட்டுள்ள சுங்கப் பரிசோதகரின் கடமைகளை விளக்குக. (20 புள்ளிகள்)

**7.** கட்டுநாயக்க விமான நிலையத்தில் நடாத்தப்பட்ட சுங்க பரிசோதனையில் பயணியொருவரினால் இந் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்ட மூன்று பயணப் பொதிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் அவை பாதுகாப்பு மையத்தில் வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. சுங்க பாதுகாப்பு மையத்தில் (SR) சேவையாற்றும் சுங்கப் பரிசோதகரால் கடைபிடிக்கப்படும் செயற்பாடுகளை விளக்குக. (20 புள்ளிகள்)

**8.** சுங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் அத்தியாயங்களை விளக்குக.

(i) 47 ஆம் பிரிவு

(ii) 48 ஆம் பிரிவு

(iii) 57 ஆம் பிரிவு

(iv) 58 ஆம் பிரிவு (05 × 4 = 20 புள்ளிகள்)

* * *